**வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி - 2019/2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் 2020 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாரான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தனைத் தவிர்த்து, வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிரயாயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிரயாயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்த்தொழில் ஐயப்பாட்டினையும் பேனுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின் ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தவதன் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. போதியளவு நிச்சியமற்ற நிலைமைகள் உள்ளதாக நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதுக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கப்பூர்வமாக செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய போதுமான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கப்பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தவா என்பதும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப் புத்தகத்தில் குறிக்கப்பட்டும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் தொடர்புடைய திகதியில் பேரேட்டிற்கு பிரதி செய்வதற்கு பதிலாக மாதமொன்றின் கொடுக்கல்வாங்களின் கூட்டுத்தொகை பேரேட்டில் கணக்கிடல் மற்றும் பல கொடுக்கல் வாங்கல்களின் கூட்டுத்தொகைக்காக நாளேட்டு வவுசர் தயாரித்திருந்தமை காரணத்தினால் கொடுக்கல் வாங்கல்கள் நாள்தோறும் இணக்கம் செய்வதற்கு முடியாதிருந்தது. | தற்போது பேணிச் செல்லப்படுகின்ற முறைக்கு பதிலாக எதிர்காலத்தில் நாளாந்தம் மேற்கொள்கின்ற கொடுக்கல் வாங்கல்கள் வெவ்வேறாக பேரேட்டிற்கு பிரதி செய்து கணக்கறிக்கையுடன் பேரேட்டினை கணக்காய்விற்கு முன்வைக்கப்படும். | மேற்கொள்கின்ற கொடுக்கல் வாங்கல்கள் நாளாந்தம் பேரேட்டிற்கு பிரதி செய்யப்படுதல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியினால் நேரடியாக கொள்வனவு செய்யப்படுகின்ற உர வகைகள் கம்பனியினுள்ளேயே சந்தைப்படுத்தல், கலத்தல், சிறிய பொதிகளாக தயாரித்தல், மீண்டும் பொதி செய்தல், ஒவ்வொரு வகைகளிடையில் மாற்றப்படல் போன்ற வெவ்வேறு செயன்முறைகளுக்கு உட்படுகின்றது. கணக்காண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட நேரடி உரம் தொடர்பாக மேற்படி வெவ்வேறு செயன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் எண்ணிக்கை உட்படுத்தப்பட்டு இறுதி இருப்பு கணக்கிடப்பட்டிருப்பினும், இருப்பு கணக்கிடப்படும் போது அடையாளப்படுத்தியுள்ள 101.17 மெட்ரிக் டொன் ஆன உர இருப்பு பற்றாக்குறை, விற்பனை கிரயத்திற்கு சீராக்கப்பட்டிராமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் இலாபம் அண்ணளவாக ரூபா 5,085,500 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது | மேற்படி பந்தியின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் இறுதி இருப்பினை பௌதீக ரீதியாக உறுதி செய்யும் சந்தர்ப்பத்தில் அரச கணக்காய்வு பிரிவின் பங்கேற்புடன் அந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்பதனால் கிரயம் கணிக்கும் போது இறுதி இருப்பு பெறுமதியும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதென குறிப்பிடப்படுகின்றதுடன் அதன் பிரகாரம் விற்பணை கிரயமும் சரியாக உறுதிசெய்யப்பட்டுள்ளமையை குறிப்பிடுகின்றேன். கம்பனியினால் கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து உர பெறுவனவும் களஞ்சிசாலைக்கு பெறப்பட்டவுடனே **GRN** அட்டை ஊடாக இருப்பு புத்தகத்திற்கு உள்ளடக்கப்படுவதுடன், மீள கட்டுதல், கலத்தல் மற்றும் பொதி செய்தல் ஆகிய செயன்முறை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலேயே இருப்பு புத்தகத்தில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். நிறுவனத்தின் இச் செயன்முறை பிரதானமாக மேற்கொள்ளப்படுவது, ஹுனுபிடிய பிரதான களஞ்சியசாலையினால் மற்றும் பொலன்னறுவை களஞ்சிய வளாகத்தில் மட்டுமாகும். இக் களஞ்சிய வளாகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டதுடன் இருப்பு பரிசோதனைக்காக அரச கணக்காய்வு உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். அதன் பிரகாரம், இவ் அனைத்து களஞ்சியசாலைகளினதும் இருப்பு புத்தகங்கள் சமப்படுத்தப்பட்டவுடன் பௌதீக இருப்பு கணிப்பீடு செய்யப்பட்டது. அதனால் விற்பனை கிரயம் தொடர்பான துல்லியம் உறுதிப்படுத்தப்பட்டமையை காண்பிக்கின்றேன். | விற்பனை கிரயம் கணிக்கும் போது இருப்பு பற்றாக்குறைகள் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் பயன்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து பொருட்களும் நுகர்வுப் பொருட்கள் கணக்கொன்றிற்கு கணக்கிடப்பட்டு களஞ்சியத்திற்கு கையளிக்கப்படுவதுடன் களஞ்சியசாலையிலிருந்து தொடர்புடைய பிரிவிற்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய பொருட்கள், சொத்துக்கள் அல்லது செலவினமாக | நுகர்வுப் பொருட்கள் கணக்கின் இருப்பு பற்றாக்குறை இறுதி கணக்குகளுக்கு சொத்து மற்றும் செலவினங்களாக சீராக்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ளப்படுகின்ற போதிலும் உள்ளவாறு இருப்பு பற்றாக்குறை ஏற்பட்டிராமையை தெரிவிக்கின்றேன். இங்கு நுகர்வுப் பொருட்களானது **FIFO** முறையில் இல்லாமல் **Average cost** முறைமைக்கு வழங்கல் மற்றும் எஞ்சிய நுகர்வுப் பொருட்கள் மீண்டும் களஞ்சியசாலைக்கு கையேற்கும் போது எந்தவொரு பெறுமதியும் குறிப்பிடப்படாது இருப்பு மட்டும் கையேற்றதாக குறிப்பிடல் ஆகிய இரு முறைகள் பின்பற்றும் போது | பற்றாக்குறைக்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளப்படுத்தி அவர்களிடமிருந்து அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடையாளப்படுத்தப்பட்டு கணக்கிடப்படும் முறை பயன்படுத்தப்படும். கணக்கு ஆண்டினுள் நுகர்வு பொருட்கள் கணக்கில் ரூபா 1,978,401 ஆன பற்றாக்குறை உருவாகியுள்ளதுடன் பற்றாக்குறை தொடர்பான விசாரனை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு பதிலாக பற்றாக்குறையின் பெறுமதி சொத்து மற்றும் செலவின கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. | ஏற்பட்ட இருப்பு வேறுபாட்டினால் அவதானிக்கப்பட்ட பற்றாக்குறையாக காண்பித்தல் காரணமாகக் கொண்டதனாலாகும். இந்த நடவடிக்கை வரும் கணக்கு ஆண்டில் முழுமையாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் களஞ்சியசாலையிலிருந்து வழங்கப்பட்ட எஞ்சிய நுகர்வுப் பொருட்கள் மீண்டும் களஞ்சியசாலைக்கு கையளிக்கும் போது நுகர்வுப் பொருள் இருப்பு கணக்கிற்கு சீராக்குவதற்கு பதிலாக அவ் இருப்பு வேறாக **used stock** என சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே நுகர்வுப் பொருள் இருப்பு பதிவேடும் **FIFO** முறைமைக்கு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | இலங்கை உரக் கம்பனியின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள வத்தலை, ஹுனுபிடிய காணி கம்பனிக்கு சட்ட ரீதியாக கையகப்படுத்தப்படாது ரூபா 1,868,965,707 ஆன பெறுமதிக்கு மீள் மதிப்பிடப்பட்டு நடைமுறையல்லாச் சொத்தாக நிதிக் கூற்றுக்களினுள் உட்படுத்தப்படல் காரணத்தினால் நடைமுறை அல்லாச் சொத்து அப் பெறுமதியினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | சனாதிபதி வழங்கலொன்றாக கெபினட் தீர்மானமொன்று காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2008 சனாதிபதி வழங்கலாக ஒப்பாவணம் காணி பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இங்கு களனி காணி பதிவாளர் அலுவலகத்திற்குரிய பிரகாரம் தனி ஒப்பாவணம் மற்றும் வத்தலைக்குரிய பிரகாரம் தனி ஒப்பாவணமாக காணி ஒப்பாவணங்கள் பெறப்பட்டன. இந்த ஒப்பாவணம் அனுப்பப்பட்டிருந்தது ஒரு மாதத்திற்கு முன்னராகும். எவ்வாறாயினும் காணி பதிவுசெய்யும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டில்லை. இந்த நடவடிக்கை தொடர்பாக இறுதி கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது திருத்தப்பட்ட கணக்கிற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் சட்ட ரீதியான உரித்து கம்பனிக்கு கையகப்படுத்தி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கொழும்பு கட்டுநாயக நெடுஞ்சாலைக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக கையகப்படுத்தப்பட்ட களனி பிரதேச செயலாளர் கீழ் காணப்படுகின்ற 28 பர்சஸ் இனாலான அரச காணி தொடர்பில் கம்பனிக்கு சட்டரீதியான உரித்து காணப்படாதெனினும் காணித் துண்டுக்காக ரூபா 12,600,000 ஆன பெறப்பட வேண்டிய இழப்பீடு கணக்கிடப்பட்டமையின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களினுள் நடைமுறை சொத்து அப் பெறுமதியினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எழுத்து மூலமாக குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ரூபா 12.6 மில்லியன் ஆன தொகை இழப்பீடாக செலுத்துமாறு அந்நிறுவனத்தினால் மதிப்பிடப்பட்டு தெரிவிக்கப்பட்டிருப்பினும் எங்கள் நிறுவனத்திற்கு மேற்படி காணியின் சட்ட ரீதியான உரித்து உறுதி செய்யப்பட்டதன் பின்னர் தொடர்புடைய தொகை செலுத்தப்படும். அதனால் காணியின் உரித்து பதிவு செய்யப்பட்டதன் பின்னர் தொடர்புடைய தொகை பெற வேண்டியமையினால் அத் தொகை பெற வேண்டிய தொகையாக கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், கணக்காய்வு அறிக்கையின் விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு இப் பெற வேண்டிய தொகை கணக்கு குறிப்பு ஊடாக வெளிப்படுத்தப்பட்டு முன்வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் சட்ட ரீதியான உரித்து உறுதி செய்துக்கொள்ளல். பெற வேண்டிய இழப்பீடு கணக்கு குறிப்பின் ஊடாக வெளிப்படுத்தப்படல். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் உர வழங்குநர்களுக்காக உரிய பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு திறைச்சேரியிடமிருந்து கட்டுநிதி பெறப்படாமை காரணத்தினால் வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட குறுகிய கால கடன் பணத்தின் ஊடாக கொடுப்பனவு தீர்க்கப்பட்டிருந்தது. பின்னர் குறுகிய கால கடன் பணம் பொது திறைச்சேரியின் பொறுப்பின் கீழான கடனுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் குறுகிய கால கடனுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட கடன் வட்டி அறவிடல் தொடர்பாக பொது திறைச்சேரியுடன் இணக்கப்பாட்டிற்கு வராமை மற்றும் குறுகிய கால வட்டி நீண்ட கால கடன் பணத்திற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணத்தினால் திறைச்சேரியின் பொறுப்பினை உறுதி செய்யாத ரூபா 268,732,450 ஆன குறுகிய கால வட்டி பொது திறைச்சேரியிடமிருந்து பெறப்பட வேண்டிய மீதியாக கணக்கிடக்கட்டிருந்தது. | அரச உர மானிய வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக பொது திறைச்சேரியின் தலையீட்டினால் கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் வசதிக்காக செலுத்தப்பட வேண்டியவ வட்டி செலுத்தல் தொடர்பாக பொது திறைச்சேரியின் தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். காலக் கடன் பெற்றுக் கொள்வதற்காக செலுத்த வேண்டிய வட்டிப் பணம் மீள காலக் கடனாக மாற்றப்படுதல் பிரயோகமாக முடியாததாகும்.<br>மேலும் வட்டி பணம் செலுத்தல் தொடர்பாக தொடர்புடைய வங்கியின் ஊடாக உறுதி செய்யப்பட்ட பதிவேடொன்று கம்பனிக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அக் கடிதத்துடன் வட்டி பணம் கோரப்பட்டு பொது திறைச்சேரியிடம் கடிதமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதனால் குறுகிய காலக் கடன் வட்டி பொது திறைச்சேரியிடமிருந்து பெறப்பட வேண்டிய பணமாக கருதப்பட்டு இறுதி கணக்கு தாயரிக்கப்பட்டுள்ளது. | பொது திறைச்சேரியிடமிருந்து பொறுப்பினை உறுதி செய்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உர ஏற்றுமதியின் போது இரு தரப்பினர் இணங்கிய அளவினை விட குறைந்த அளவு வழங்குனர்களினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றின் போது வழங்குனரின் இன்வொயிஸ் பெறுமதியில் குறித்த குறைவான உர இருப்பின் பெறுமதி குறைக்கப்பட்டு கணக்கிடப்பட வேண்டிய போதிலும் வழங்குனரின் இன்வொயிஸ் பெறுமதி கொள்வனவாகவும் குறைவாக அனுப்பப்பட்டிருந்த இருப்பின் பெறுமதி | கடனுறுதிக் கடிதம் திறந்த பின்னர் வழங்குனரினால் வங்கிக்கு முன்வைக்கப்படுகின்ற வணிக விலைப்பட்டியல் மற்றும் கப்பல் பொறுப்பு அட்டையை அடிப்படையாகக் கொண்டு வங்கியானது வழங்குனருக்கு பணம் விடுவித்திருந்தது. எவ்வாறெனினும், உள்ளவாராக பெற்றுக்கொண்ட இருப்பு துறைமுகத்திடம் உறுதி செய்யும் போது ஏற்படுகின்ற வேறுபாடு எங்களால் வழங்குனர்களிடமிருந்து அறவிடப்பட்டதுடன் எதிர்காலத்தில் ஏதேனும் வங்கி கட்டணமொன்று அறவிடப்படுவதற்கு இருக்குமெனின் அப் பெறுமதியும் வழங்குனரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறப்பட்ட உர அளவு மட்டும் கணக்கிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட்ட வேண்டிய மீதியாக கணக்கிடப்பட்டிருந்தது. ஆண்டினுள் இன்வொயிஸ் செய்யப்பட்ட இருப்பு பெறுமதியினை விட குறைவாக இருப்பு பெறுவனவுகளாக ரூபா 16,861,511 ஆன தொகை பெறப்பட வேண்டிய மீதியாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் ஆண்டு இறுதியில் பெறப்பட வேண்டிய மீதி ரூபா 6,398,762 ஆக காணப்பட்டது. மேற்படி பெற வேண்டிய மீதி குறித்த வழங்குனருக்கு செலுத்தப்பட வேண்டிய மீதிக்கு சீராக்கப்பட்டு கணக்கிடப்படாமையின் காரணத்தினால் குறுகிய வங்கி கடன் பெற்றுக் கொள்ளல் ஊடாக மேற்படி மீதியும் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டு மீண்டும் வழங்குனரிடமிருந்து அறவிடப்படுவதற்கு ஏற்பட்டமையினால் மேலதிக வட்டி செலவினமொன்று ஏற்பதற்கு ஏற்பட்டுள்ளதுடன் போலியான பெற வேண்டிய மீதியொன்று கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| **(இ)** | ரூபா 72,102,543 ஆன வியாபார கடன் பட்டோருக்கு தொடர்புடைய மீதி உறுப்படுத்தல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | இங்கு முன்வைக்கப்பட்டிருந்த கணக்குகளில் பெறப்பட்டிருந்த சான்றுகள் திருத்தப்பட்ட கணக்கு அறிக்கையுடன் முன்வைக்கின்றேன். | மீது உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 4,636,187,820 ஆன வியாபார கடன் கொடுநர்களுக்கு தொடர்புடைய மீதி உறுப்படுத்தல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை | இங்கு முன்வைக்கப்பட்டிருந்த கணக்குகளில் பெறப்பட்டிருந்த சான்றுகள் திருத்தப்பட்ட கணக்கு அறிக்கையுடன் முன்வைக்கின்றேன். | மீது உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 திகதிய PED/12 ஆம் ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட அரச நிறுவனங்களின் நல்லாட்சிக்கான வழிக்காட்டி கோவையின் 8.3.3 ஆம் பந்தி | பொது திறைச்சேரியிடமிருந்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவு முறையில் மற்றும் தேசிய சம்பள மற்றும் கொடுப்பனவு கொள்கைககள் பிரகாரம் முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் மொத்த பெறுமதி ரூபா 49,940,295 ஆன தொகை ஊக்குவிப்பாக ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருப்பது, துறைமுகத்திற்கு வருகை தரம் கப்பல்களை விரைந்து தரையிருக்கும் போது கப்பல் நிறுவனங்களினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற பணமாகும். இந்த உர இருப்பு விரைவாக துறைமுகத்தினுள் தரையிரக்கப்பட்டதன் பின்னர் தொடர்புடைய கப்பல் கம்பனி கப்பல் இருப்பினை தரையிரக்கலினை விரைவுப்படுத்துவதற்காக பணத்தொகை எங்கள் நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளதுடன் அது ஊழியர்களின் ஊக்குவிப்பு கொடுப்பனவாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பகிந்ர்தளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த தொகை ஊழிர்களுக்கு பகிர்தளிக்கப்பட்டிருந்தது, ஊழியர்களின் செயலாற்றலின் அடிப்படையில் | இந்த கொடுப்பனவு சட்ட ரீதியானதன்று என கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஈட்டிக்கொண்ட பணத்தினால் என்பதையும் குறிப்பிடுகின்றேன். மேற்படி 2003 யூன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை **PED/12** இன் பிரகாரம் போனஸ் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் செலுத்தல் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருப்பது, நிறுவனத்தின் இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு அரசிற்குரிய கம்பனிகள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு சந்தர்ப்பமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதெனவாகும். அதன் பிரகாரம் ஊக்குவிப்பு கொடுப்பனவு தொடர்பான குறித்த சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டு பொது திறைச்சேரியிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு கடிதமொன்று முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக பதிலொன்று பெறப்படாமையினாலும் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தாமைக்கு எதிரான தொழிற்சங்கங்களின் செல்வாக்கினாலும் பல ஆண்டுகளாக கொடுப்பனவு செய்யப்பட்ட இந்த ஊக்குவிப்பு பொடுப்பனவு தலைவரின் அங்கீககாரத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டது. | |
| **(ஆ)** | 2003 யூன் 02 திகதிய **PED/12** ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட அரச நிறுவனங்களின் நல்லாட்சிக்கான வழிக்காட்டி கோவையின் 5.1 ஆம் பந்தி | கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் அனைத்து அரச கம்பனிகளும் நிதிக் கூற்றுக்களினை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் நிதி ஆண்டு | அக் காலத்தினுள் கொரோனா தொற்று நிலையின் காரணத்தினால் நாட்டில் காணப்பட்ட ஊரடங்கு சட்டம் காரணமாக கணக்கு அறிக்கை தாமதமாகின. இது எங்கள் நேரடி கட்டுப்பாடன்றி ஏற்பட்டமையை குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறைவடைந்து 210 நாட்கள் கடந்த பின்னரே நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. | | |
| **(இ)** | 2015 மே 25 திகதிய PED/1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2016 ஒக்தோபர் 25 திகதிய PED/1/2015 (i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு | போக்குவரத்து வசதி உரித்து அற்ற முகாமையாளருக்கு (பெறுகை மற்றும் இறக்குமதி) வாகனங்கள் பெற்றுக் கொடுக்கப்படாது 120 லீட்டர் எரிப்பொருளுக்காக ரூபா 11,400 ஆன எரிப்பொருள் கொடுப்பனவொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி சுற்றறிக்கை ஊடாக உள்ளடக்கப்படாத மத்திய மட்டத்திலான 09 முகாமையாளர்களுக்கு சுற்றறிக்கை ஏற்பாட்டினை விஞ்சி ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 10,000 வீதமாக பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 1,160,000 ஆன எரிபொருள் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | திரு . ஜீ. ஜீ சமன் பதிற்கடமை முகாமையாளரிடம் (பெறுகை மற்றும் இறக்குமதி) வாகனமொன்று இல்லாமையினால் **PED 1/2015** ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவொன்று செலுத்தப்பட முடியாது. எனினும் அவர் முகாமையாளர் (பெறுகை மற்றும் இறக்குமதி) பதவியில் பதிற் கடமை புரிகின்றமையினால் உத்தியோகப்பூர்வ வாகனமொன்று பெறுவதற்கு உரித்தினை பெறுவார். எனினும் அவருக்காக தொகுதி வாகனமொன்றினை பயன்படுத்துவதெனின், ஒரு நாளைக்கு ஹூனுபிடிய தொடக்கம் பண்டாரகமை பெல்லந்துடாவை வரையும், மீண்டும் பண்டாரகமை பெல்லந்துடாவை தொடக்கம் ஹூனுபிடிய வரையும் 04 தடவைகள் பயணிக்க வேண்டும். அதற்காக வாகனமொன்றிற்கு செலவிடப்படுகின்ற செலவினம் மற்றும் ஓட்டுநரின் மேலதிக கொடுப்பனவிற்கான செலவினம் கருத்திற் கொண்டு குறைந்தபட்ச எரிபொருள் கொடுப்பனவு செலுத்துவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. அதன் பிரகாரம் 2015.12.15 திகதிய பதிற் கடமை முகாமையாளருக்கு (பெறுகை மற்றும் | இந்த கொடுப்பனவு சட்ட ரீதியானதற்ற செலவீனமாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

இறக்குமதி) ‘‘மாதாந்தம் போக்குவரத்து கொடுப்பனவு பெற்றுக் கொடுத்தல்’’ என முன்வைக்கப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரிக்கை ஊடாக திரு ஜீ.ஜீ சமன் இற்கு முதலாம் தரத்தின் முகாமையாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் கொடுப்பனவான 120 லீட்டரினை அடிப்படையாகக் கொண்டு அப்போதிருந்த குறைந்தபட்ச எரிபொருள் கொடுப்பனவான (120 லீட்டர் × ரூபா 95/-) ரூபா 11.400.00 ஆன தொகை 2015.12.01 திகதி தொடக்கம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**PED 1/2015** ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன உரித்து அற்ற மத்திய மட்டத்திலான முகாமையாளர்களுக்காக குழு போக்குவரத்து வசதி பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எங்கள் கம்பனியின் மத்திய மட்டத்தின் முகாமையாளர்கள் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து கடமைக்கு சமூகமளிக்கின்றமையி னால் அவ்வாறு குழு போக்குவரத்து வசதி வழங்கும் போது நிறுவனத்திற்கு பாரிய கிரயமொன்று ஏற்பதற்கு நேரிகின்றது. அதனால், ஒருவருக்கு ரூபா 10,000.00 கொடுப்பனவொன்று பெற்றுக் கொடுத்தல் நிறுவனத்திற்கு இலாபமானதென்பதனால் மத்திய மட்டத்தின் முகாமையாளர்களுக்காக போக்குவரத்து கொடுப்பனவாக ரூபா 10,000.00 ஆன தொகை கொடுப்பனவு செய்வதற்கு

தீர்மானிக்கப்பட்டது.

**PED 1/2015** ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகப்பூர்வ வாகன உரித்தற்ற மத்திய மட்டத்தின் முகாமையாளர்களுக்காக குழு போக்குவரத்து வசதி பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எங்கள் கம்பனியின் மத்திய மட்டத்தின் முகாமையாளர்கள் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து கடமைக்கு சமூகமளிக்கின்றமையி னால் அவ்வாறு குழு போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் போது நிறுவனத்திற்கு பாரிய கிரயமொன்று ஏற்பதற்கு நேரிடுகின்றது. அதனால், ஒருவருக்கு ரூபா 10,000.00 கொடுப்பனவொன்று பெற்றுக் கொடுத்தல் நிறுவனத்திற்கு இலாபமானதென்பதனால் மத்திய மட்டத்தின் முகாமையாளர்களுக்காக போக்குவரத்து கொடுப்பனவாக ரூபா 10,000.00 ஆன தொகை கொடுப்பனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 97,993,276 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 34,506,078 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 132,499,354 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு உர விற்பனை வருமானம் அதிகரித்தல் மற்றும் கொள்வனவு கிரயம் குறைந்தமை பிரதான காரணங்களாகக் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மானிய முறையினுள் நெல் பயிற்செய்கைக்காக தேசிய உர செயலாளர் அலுவலகம் அங்கீகரிக்கப்பட்ட கமநல சேவைகள் மத்திய நிலையங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அளவில் உரம் பெற்றுக் கொடுத்தல் தவிர உர சந்தைப்படுத்தல் மேம்பாட்டினுள் வருமானம் அதிகரித்துக் கொள்வதற்கு நிகழ்கால உர விநியோக முறையினுள் கம்பனிக்கு இடமற்ற நிலையில் இலங்கை உரம் என்ற பெயரில் 1,000 பெரிய, சிறிய கூடைகள் அச்சிடுவதற்காக ரூபா 470,000 ஆன சிக்கனமற்ற செலவினம் மேற்கொண்டிருந்தது. விநியோக மேம்பாட்டிற்காக அச்சிடப்பட்டுள்ள இந்த கூடை இருப்பில் பகுதியொன்று கம்பனியின் ஊழியர்களுக்கு இலவசமாகக விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 455 கூடைகள் 16 மாதங்களாக நுகர்வு பொருள் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | எங்கள் கம்பனியின் நிரந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பாதுகாப்பு கட்டுபாட்டாளர்களுக்கு உத்தியோக கடமைகளுக்காக வசதிகளாக ஆண்டிற்கு கை மின் விளக்கு, குடையொன்று மற்றும் மழை அங்கி பெற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த குடை சாதாரண சந்தையில் காணப்படும் குடைக்கு பதிலாக எங்கள் கம்பனியின் சின்னம் அச்சிடப்பட்ட குடையொன்று அதற்காக கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் திறந்த போட்டிச் சந்தையில் உர விற்பனை மேற்கொள்ளப்படும் காலத்தில் மிகவும் குறைந்த கிரயத்தின் கீழ் விளம்பர பிரச்சாரமாக இந்த குடை அச்சிட்டு விற்பனை முகவர்களிடம் இலவசமாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது எங்கள் கம்பனியின் இலங்கை உரம் என்ற பெயர் சந்தையில் பிரபல்யமாக்குவதற்கு தேவை காணப்படுகின்றமையினால் மிகவும் குறைந்த கிரயத்தில் அனைத்து ஊழியர்களுக்கும் மற்றும் கமத்தொழிலுக்கு தொடர்புடைய நிகழ்வுகளின் போது எங்கள் கம்பனியின் அனுசரனையாக இந்த குடைகள் வழங்குவதில் பிரச்சாரமொன்றினை பெறல் பிரதான எதிர்பார்ப்பாகும். அதனால் இது வெறுமனே எங்கள் வணிக பெயரினை சந்தையினுள் பாதுகாப்பதற்கு வடிவமைக்கப்பட்டதுடன், சிக்கனமற்ற செலவீமன்று. | மானிய முறையினுள் விற்பனை மேம்பாட்டிற்காக செலவினம் ஏற்கப்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மானிய உர இருப்பு, முறையான முகாமைத்துவத்துடன் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணத்தினால் கடந்த கணக்கு ஆண்டினுள் ரூபா 40,288,200 பெறுமதியான 671.47 மெட்ரிக் டொன் உரம் மற்றும் கணக்காண்டினுள் ரூபா 13,526,400 பெறுமதியான 225.44 மெட்ரிக் டொன் மானிய உரம் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு முடியாதவாறு சேதத்திற்கு உட்பட்டிருந்தமை காரணத்தினால் அரசிற்கு ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 53,814,600 ஆக காணப்பட்டது | 05 ஆண்டு காலம் தொடக்கம் எங்கள் கம்பனியினால் இறகுமதி செய்யப்பட்ட மானிய மற்றும் மானியமற்ற மொத்த உர அளவு 1,250,000 மெட்ரிக் டொன் இற்கு அதிமாகும். இவ்வாறு 05 ஆண்டுகள் தொடக்கம் வெவ்வேறு காரணங்களினால், அதாவது<br>1. கப்பல்களிலிருந்து பெறப்பட்ட மேலதிக கழிவுத்திரட்டு உரம் **(Sweeping )**<br>2. செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது அகற்றப்படுகின்ற கழிவுத்திரட்டு உரம்<br>3. இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த உரம்.<br>4. நீதிமன்றத்தினால் எங்கள் கம்பனிக்கு கையளித்த உர இருப்பு<br>5. காலாவதியாகிய உர இருப்பு<br><br>இவ்வாறு உரம் களஞ்சியசாலைகளிலிருந்து வழங்கப்படாது எஞ்சியிருந்த உரம் பிரதான களஞ்சிய சாலை வளாகத்தில் வேறு இடமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உர இருப்பு தொடர்பாக களஞ்சியசாலை இடவசதி போதாமையினால் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டு அமைச்சின் செயலாளரினதும் அங்கீகாரத்துடன் அரசினால் நடத்திச் செல்லப்படுகின்ற பண்ணைகளில், முப்படை மற்றும் சிலில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் சிறைச்சாலை போன்ற அரச நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br>இவ் உர இருப்புக்களின் கலவைக்காக பெறக்கூடிய உயர்ந்தபட்டச அளவு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டதன் பின்னர் எவ்வழியிலும் விற்பனை செய்வதற்கு முடியாத இந்த உர இருப்பு கரிய உரத்துடன் இரசாயன உரம் கலக்கப்பட்டு உர வகை தயாரிப்பதற்கு பொருத்தமான முறைமையொன்று மற்றும் உரச் சட்டத்தின் பிரகாரம் அவ்வாறான உரம் உற்பத்தி செய்வதற்கான அதிகாரம் எங்கள் கம்பனிக்கு இல்லை. மேலும், ரூபா 53.8 மில்லியன் நட்டம் குறிப்பிடப்பட்டிருப்பினும் அது விநியோக செயற்றிறனின்மையினால் ஏற்படவில்லை என்பதனை காண்பிக்க முடிகின்றது. | கம்பனிக்கு நட்டமொன்று ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆண்டு இலாபம் மற்றும் கப்பல் தடைநீக்க வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு 2020 மார்ச் மாதம் அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்க்கை படி மீது 03 மாத ஊக்குவிப்பு கொடுப்பனவொன்று செலுத்துவதற்காக முறையாக 2020 மார்ச் 20 ஆம் திகதி மற்றும் 2020 செப்தெம்பர் 25 ஆம் திகதிகளில் 02 அமைச்சரவை பத்திரங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. இரு சந்தர்ப்பங்களிலேயும் கப்பல் தடைநீக்க வருமானத்தில் **60%** இனை விஞ்சாத வண்ணம் வருடாந்த ஊக்குவிப்பு செலுத்துமாறு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதற்கு அமையாதவாறு கப்பல் தடைநீக்க வருமானம் கருத்திற் கொள்ளப்படாது 2020 மார்ச் மாதம் செலுத்தப்பட்டிருந்த அடிப்படை சம்பளம் மற்றும் வாழ்கைப் படி கொடுப்பனவை அடிப்படையாகக் கொண்டு 03 மாதங்களுக்கான சம்பளமொன்று ஊக்குவிப்பு கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த உயர்ந்தபட்ச ஊக்குவிப்பு அளவு (கப்பல் தடைநீக்க கட்டணம்***60%=** ரூபா.**44,407,138*60%)** ரூபா 26,644,282 ஆகும். எனினும் பணிப்பாளர் சபையின் தீர்மாணத்தின் பிரகாரம் அமையாதவாறு மொத்த பெறுமதி ரூபா 49,940,295 ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தல் காரணத்தினால் ரூபா 23,296,013 ஆன தொகையொன்று அங்கீகாரமின்றி ஊக்குவிப்பு | மீளாய்வாண்டின் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தப்பட்டிருப்பது, துறைமுகத்திற்கு வருகை தரம் கப்பல்களை விரைந்து தரையிருக்கும் போது கப்பல் நிறுவனங்களினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற பணமாகும். இந்த உர இருப்பு விரைவாக துறைமுகத்தினுள் தரையிரக்கப்பட்டதன் பின்னர் தொடர்புடைய கப்பல் கம்பனி கப்பல் இருப்பினை தரையிரக்கலினை விரைவுப்படுத்துவதற்காக பணத்தொகை எங்கள் நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளதுடன் அது ஊழியர்களின் ஊக்குவிப்பு கொடுப்பனவாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பகிந்ர்தளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த தொகை ஊழிர்களுக்கு பகிர்தளிக்கப்பட்டிருந்தது, ஊழியர்களின் செயலாற்றலின் அடிப்படையில் ஈட்டிக்கொண்ட பணத்தினால் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.<br>மேற்படி 2003 யூன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை **PED/12** இன் பிரகாரம் போனஸ் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் செலுத்தல் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தது நிறுவனத்தின் இலாபத்தின் அடிப்படையாகக் கொண்டு அரசிற்குரிய கம்பனிகள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு சந்தர்ப்பமொன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதெனவாகும். அதன் பிரகாரம் ஊக்குவிப்பு கொடுப்பனவு தொடர்பான குறித்த சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டு பொது திறைச்சேரியிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு கடிதமொன்று முன்வைக்கப்பட்டது. இது தொடர்பாக பதிலொன்று பெறப்படாமையினாலும் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தாமைக்கு எதிராக தொழிற்சங்கங்களின் செல்வாக்கினாலும் பல ஆண்டுகளாக கொடுப்பனவு செய்யப்பட்ட இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு அப்போதிருந்த தலைவரின் அங்கீகாரத்தின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டது. எனினும், தற்போது இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு தொடர்பாக தெளிவான ஆலோசனை | பணிப்பானர் சபையின் தீர்மானத்திற்கு அமைவற்ற கொடுப்பனவுகள் சட்ட ரீதியானதற்ற கொடுப்பனவாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | பெறப்பட்டுள்ளமையினால் எதிர்காலத்தில் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | கம்பனியின் முகாமைத்துவம் கணக்காண்டினுள் செயற் மூலதனம் என்று முகாமைத்துவம் செய்வதற்கு தோல்வியடைந்தமை காரணத்தினால் ரூபா 66,858,564 ஆன வங்கி பற்றொன்றிற்காக ரூபா 572,290 ஆன தவிர்த்துக் கொள்ள இயலுமாகவிருந்த கடன் வட்டி செலவினமொன்றினை ஏற்பதற்கு நேர்ந்திருந்தது. | கம்பனி வங்கி நடவடிக்கைகளினை மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஊடாக மேற்கொள்கின்றது. 2020 மார்ச் 06 ஆம் திகதி இலங்கை வங்கி நிறுவனக் கிளையொன்றில் இடம்பெற்ற வேலை நிறுத்தம் காரணத்தினால் அத் திகதியில் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய தொகை வங்கி நடவடிக்கைகள் நடைப்பெறாமையின் காரணத்தினால் வரவு வைக்கப்பட்டிராததுடன் அதற்காக வங்கியினால் ரூபா 565,530.41 ஆன வங்கி பற்று வட்டியுடன் வங்கியின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இது வங்கியினால் ஏற்பட்ட தவறென்பதனால் உருவாகிய வங்கி மேலதிக பற்று வட்டியென்பதனால் இது வங்கியினால் திருத்தப்பட வேண்டியதொன்றாகும். இது தொடர்பாக 2021.03.03 திகதிய கடிதத்தின் ஊடாக வங்கிக்கு தெரிவிக்கப்பட்டதுடன் வங்கி மேலதிக பற்று வட்டி பணம் மீண்டும் கம்பனியின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கம்பனிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் கம்பனியின் செயற்மூலதனம் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுள்ளதெனவும் இது வங்கியினால் ஏற்பட்ட கைதவறலென்பதனையும் தெரிவிக்கின்றேன். | கடன் வட்டி செலவினத்தினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கணக்கு ஆண்டினுள் இறக்குமதி செய்யப்பட்ட 04 கடன்பத்திரங்களுக்கு தொடர்புடைய 11,024.25 மெட்ரிக் டொன் **TSP** (ஆய்வுக் கூட அறிக்கைகள் தோல்வி காரணத்தினால்) விவாசாயிகளுக்கு வழங்குவதற்கு தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் ஆய்வுக் கூட அறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் அங்கீகாரமின்றி கம்பனியினால் மேற்படி உர இருப்பு விவசாயிகளுக்கு | எங்கள் கம்பனியினால் மானிய உரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதும் அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட உரம் கமநல மத்திய நிலையங்களுக்கு பெற்றுக் கொடுப்பதும் தேசிய உர செயலாளர் அலுவலகத்தினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற விநியோக திட்டத்தின் அடிப்படையில் மட்டுமாகும்.<br>அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட உரம் தேசிய உர செயலாளர் அலுவலகத்தினால் தெரிவு பரிசோதனை செய்யப்பட்டு அவ் உரத்தின் தரம் மற்றும் நஞ்சாகாமை தொடர்பில் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் மட்டுமே மேற்கூறப்பட்ட பிரகாரம் விநியோகிப்பதற்கு எங்கள் கம்பனிக்கு | தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் அங்கீகாரம் அற்ற உரம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படக் கூடாது. |

விநியோகிக்கப்பட்டிருந்தது. இலங்கை உர கம்பனியினால் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட மேற்படி தரத்தினாலற்ற உர இருப்பிற்காக உர மானிய பணம் செலுத்துவதற்கு தேசிய உர அலுவலக செயலக அலுவலகம் பரிந்துரை செய்யப்படாதிருப்பினும் உரத்திற்காக செலுத்தப்பட வேண்டிய திகதிக்கு குறுகிய கால வங்கி கடனொன்று ஊடாக கொடுப்பனவு தீர்க்கப்பட்டு பின்னர் பொது திறைச்சேரியின் பொறுப்புடன் நீண்ட கால கடன் பணத்திற்கு மாற்றப்பட்டு முறையான அங்கீகாரமின்றி மானிய பணம் பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்படவேண்டியுள்ளது. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட டி.எஸ்.பீ உரங்களின் மாதிரி தேசிய உர செயலாளர் அலுவலகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் அதற்குரிய ஆய்வுக்கூட அறிக்கை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு நேர்ந்த கைதவறலினால் அவர்களினால் கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய சந்தைப்படுத்தல் அங்கீகாரம் **(Marketing Apprival)** எதிர்காலத்தில் பெற்றுக் கொடுக்கும் உறுதியுடன் அவர்களினாலேயே கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள விநியோக திட்டத்திற்கு தொடர்புடையதாக உர பற்றாக்குறையொன்று ஏற்படுவதற்று இடமளிக்காது கமநல மத்திய நிலையங்களுக்கு இந்த உரம் பெற்றுக் கொடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அப் பிரகாரமே அப்போதிருந்த மதிப்பிற்குரிய கமநல அமைச்சரும் எங்கள் கம்பனிக்கு தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் வரை உரம் வழங்கப்படுமாறு மேற்கொண்ட கடுமையான கோரிக்கையை கருத்திற் கொண்டு எங்கள் கம்பனியினால் இந்த விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் ஆலோசனை பெற்றுக் கொடுத்த உத்தியோகத்தர்களும் நிறுவனங்களுக்கு இடமாற்றப்பட்டு சென்ற பின் புதிதாக ஆட்சேரப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களினால் மேற்படி விநியோகம் மேற்கொள்ளப்பட்டு 13 மாதங்களுக்கு பின்னர் அவ் டீ.எஸ்.பீ உரங்களுக்கு தொடர்புடைய ஆய்வுக்கூட அறிக்கை முன்வைக்கப்பட்டு மேற்படி உரம் தரமற்றது என தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு பெற்றுக் கொடுக்கப்பட்ட உரம் அங்கீகாரமின்றி பெற்றுக் கொடுக்கப்பட்டதென உர செயலாளர் அலுவலகத்தினால் குறிப்பிடப்பட்டிருப்பினும் அதன் முழு பொறுப்பும் தேசிய உர செயலாளர் அலுவலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரே கப்பலில் பல கம்பனிகளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஒரே வழங்குனரின் டீஎஸ்பீ இருப்பில் எங்கள் கம்பனிக்கு பெறப்பட்ட உர இருப்பில் ஆய்வுக் கூட அறிக்கை தோல்வி கண்டமையிலும் மற்றைய கம்பனிகளின் ஆய்வுக்கூட

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கை வெற்றி கண்டமை தொடர்பிலும் ஏற்பட்ட பிரச்சனையில் மேற்கொண்ட விசாரணையின் பிரகாரம் ஆய்வுக்கூட அறிக்கை தொடர்பாக தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் பொறுப்பு கூற வேண்டிய 03 உத்தியோகத்தர்களின் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்பு விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் தற்போது விவசாயிகள் அவ் உரத்தினை பயன்படுத்தி உற்பத்தி பெற்றுக் கொண்டுள்ளனர். அதற்காக ஏற்கபட்ட கைளாளுதல் செலவினம் மற்றும் ஏனைய செலவினம் கம்பனியினால் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படாத வண்ணம் பொது திறைச்சேரியிடமிருந்து கோரப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இரசாயன உர பயன்பாடு குறைக்கப்பட்டு கரிம உர பயன்பாட்டினை பிரபலப்படுத்துவதற்காக கண்டி, நுவரஎலிய மாவட்டங்களில் இரசாயன உர ஒதுக்கம் 25% இனால் குறைத்து கரிம மற்றும் கலவை உரம் பெற்றுக் கொடுப்பதற்கு தேசிய உர செயலாளர் அலுவலகம் ஊடாக ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பினும் அதற்கமைவாக கரிம உரம் மற்றும் கலவை உர உற்பத்தி மற்றும் விநியோகத்திற்காக கம்பனி முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இரசாயண உரம் பயன்பாட்டினை குறைத்தல், கரிய உரம் மேம்பாட்டின் அரச கொள்கைகளுக்கு அமைவாக கரிம உரம், சந்தைக்கு வழங்குவதற்காக எங்களுக்கு தேவையான அளவு தொடர்ச்சியாக வழங்கக்கூடிய குறித்த நிலை மற்றும் பொருத்தமான விலை பேணப்பட்டு தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் அங்கீகாரமுடைய ஒரே கரிம உர உற்பத்தி நிறுவனமான **Hyosung ONB** நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதுடன், புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உடன்பட்டு 2016 ஆம் ஆண்டிலிருந்து தேவையான கரிம கட்டி உரம், சந்தைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக ஆய்வுக்கூட பரிசோதனைக்கு உட்பட்டு பெறுகை நடவடிக்கையின் கீழ் தெரிவு செய்யப்பட்டு இன்னும் சில நிறுவனங்கள் மற்றும் கொம்போஸ்ட் உரத்தினை போன்று கரிம திரவ உரமும் கொண்டு வரப்பட்டு சந்தை தேவையின் பிரகாரம் வழங்கும் நடவடிக்கை எங்கள் கம்பனியால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறே நகர கழிவு முகாமைத்துவத்துடன் சேர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்காக பல கலந்துரயையாடல்கள் நடத்தப்பட்டதுடன் கரிம உரம் 20 மெட்ரிக் டொன் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையானரான திரு பிரியன்த யாபாவை தொடர்புப்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், | தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் ஆலோசனை பிரகாரம் கரிம உரம் உற்பத்திக்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இலங்கை உர கம்பனி ஊடாக இரசாயண உரம் மட்டும்' விற்பனை செய்யப்பட வேண்டுமெனவும் இரு நிறுவனங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்குமாறும் குறிப்பிடப்பட்டு அமைச்சரவை தீர்மானம் தெரிவித்திருப்பதனால் அதற்காக பொருத்தமான இறுதி தீர்மானத்திற்கு வரும் வரையில் எங்களினால் இரசாயண உரம் விநியோகிக்கும் செயற்பாட்டிற்கு முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் **Hyosung ONB** நிறுவனத்துடன் இணைந்து கரிம கட்டி உரம் விநியோகிக்கும் நடவடிக்கைகளும் இது வரையில் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் ஊடாக அரசின் கரிம உர மேம்பாடு வேலைத்திட்டத்திற்கு முழு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. | |
| **(உ)** | **2019/MOA/CRC/UR(G)/04/01** ஆம் கணக்கு இலக்க மற்றும் 814 ஆம் கொள்முதல் ஆணையின் கீழ் MV Alby Meloty கப்பலிலிருந்து 14250 மெட்ரிக் டொன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. கப்பலிலிருந்து உர இருப்பு இறக்கும் சந்தர்ப்பத்தில் கப்பலினுள் உரம் கட்டியாகியிருத்தல், நிறமங்கியிருத்தல் காரணத்தினால் வழங்குனரின் தேசிய பிரதிநிதியுடனான உடன்பாட்டுடன் களனி பெதியாகொடை பிரதேசத்தில் களஞ்சியசாலையொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டு இரு தரப்பினதும் இணக்கத்துடன் நியமிக்கப்பட்ட பரிசோதனை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஹுனுபிடிய இலங்கை உர கம்பனியில் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னர் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இரு தரப்பினர் இடையில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் உரம் பெறப்படாத சந்தர்ப்பத்தில் உர இருப்பினை நிராகரிக்கும் திறன் காணப்படுகையிலும் அவ்வாறு | **Mv Alby Melady** கப்பலிலிருந்து பெறப்பட்ட 14,250 ஆன மெட்ரிக் டொன் யூரியா துறைமுகத்திலிருந்து தரையிரக்கிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தொடர்புடைய உரங்களில் மாதிரி பெற்றுக் கொள்ளப்பட்டு ஆய்வுக்கூட அறிக்கை மற்றும் தேசிய உர செயலாளர் அலுவலகத்திலிருந்து விற்பனை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மானிய உர இருப்பு விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கப்பலினுள் 8500 மெட்ரிக் டொன் அளவு செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மழை பெய்துக் கொண்டிருந்ததுடன் கம்பலின் கதவுகள் மூடுவதற்கு தாமதமாகியதன் காரணத்தினால் கப்பலில் காணப்பட்ட உர இருப்பு மேல் பகுதி மழையில் நளைந்தது. அச் சந்தர்ப்பத்தில் அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டது. இதற்கு முன்னர் இவ்வாறான நிகழ்வுகளின்போது செயற்பட்ட பிரகாரம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வழங்குனர் கம்பனி மற்றும் எங்கள் கம்பனி பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுயாதீன மீளாய்வு குழுவொன்று நியமிக்கப்பட்டு சேதத்திற்கு உட்பட்ட உரங்களில் தனித்தனி மாதிரி பெற்றுக் கொள்ளப்பட்டு ஆய்வுக்கூட அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அவ் ஆய்வுக்கூட அறிக்கைகளின் பிரகாரம் கப்பலின் மேல் பகுதியில் காணப்பட்ட | தரமற்ற உர இறக்குமதி, தரமிரக்கல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் மேற்கொள்ளப்படக் கூடாது. |

செய்வது மேற்படி கொடுக்கல்வாங்கல் தொடர்பாக தேசிய உர செயலாளர் அலுவலகத்திற்கு அறிவிக்காமை, கட்டியாகி, நிறமங்கியிருந்த உர இருப்பு தொடர்பில் தேசிய உர செயலாளர் அலுவலகம் ஊடாக ஆய்வுக் கூட பரிசோதனை மேற்கொள்ளமை மற்றும் ஒருங்கிணைந்து மேற்கொண்ட பரிசோதனைக்காக தேசிய உர செயலாளர் அலுவலத்தின் பிரதிநிதியொருவர் உள்ளடக்கப்பட்டிராமை காரணத்தினால், உர இருப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய முறைமைகள் கருத்திற் கொள்ளப்படாது கம்பனியின் முகாமைத்துவம் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

உர பொதிகளில் காணப்பட வேண்டிய நீராவியின் சதவீதமும் தொடர்புடைய தர மதிப்பினை விட சற்று அதிகமாக காணப்பட்டதுடன் கீழ் பகுதியில் காணப்பட்ட உர இருப்பு எந்தவொரு சேதமும் அடைந்திருக்கவில்லை. இந்த பிரச்சனை தொடர்பாக இன்னுமாக விசாரனைக்கு உட்படுத்தும் வரையில் கப்பலின் தாமதக் கட்டணம் மற்றும் நாட்டின் யூரியா தேவை, பெறுகை நடவடிக்கையின் பிரகாரம் இருப்பு பெறப்படுவதற்கு உரிய திகதி கருத்திற் கொள்ளப்பட்டு வழங்குனரிடமிருந்து அனைத்து செலவினம் அறவிடப்படும் உடன்பாட்டின் அடிப்படையில் எங்கள் கம்பனியின் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் குறித்த உர இருப்பு தரையிரக்கலும் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளி களஞ்சியசாலையொன்று குறித்த உர இருப்பு களஞ்சியப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இந்த கப்பலிலேயே ஏனைய அரச நிறுவனமான கொமர்ஷியல் உர கம்பனிக்கும் யூரிய இருப்பொன்று பெறப்பட்டிருந்ததுடன் அக் கம்பனியும் இந்த படிமுறையை பின்பற்றிருந்தது) பின்னர் சேதத்திற்கு உட்பட்ட உர இருப்பினை அடையாளப்படுத்தி அவ் இருப்பினை அகற்றி முறையாக மீண்டும் தயாரிக்கப்பட்ட உர இருப்பு கையேற்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீண்டும் பொதி தயாரிக்கும் போது அடையாளப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க இயலாத உரம் தனியாக களஞ்சியசாலையொன்றில் தற்போது வரையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்குரிய மொத்த செலவினம் மற்றும் நட்டம் (13.32 மில்லியன்) தொடர்புடைய வழங்குனர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பாக எங்கள் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு தெரிவித்து பெற்றப்பட்ட அங்கீகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரான கமநல அமைச்சின் செயலாளருக்கு எழுத்துமூலமாக தெரிவிக்கப்பட்டது. இந்த உர இருப்பு விநியோகிக்கப்பட்டதன் பின்னர் கையாளப்பட்ட விவசாயிகளின் உரங்களின் தரம் தொடர்பில் எந்தவொரு புகார்களும் கிடைக்கபெறவில்லை.

| | | |
|---|---|---|
| (ஊ) களஞ்சியசாலை ஊழியர்களுக்காக ரூபா 10,530 மற்றும் அலுவலக ஊழியர்களுக்காக ரூபா 7,938 ஆக மொத்த பெறுமதி ரூபா 4,813,131 ஆன தொகை வருடாந்த ஆடை கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருப்பினும் இதற்காக அடிப்படையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் ஊழியர்களுக்காக உத்தியோகப்பூர்வ ஆடைகள் வழங்கப்படாமையினால் இந்த கம்பனி, கூட்டுத்தாபனமாக காணப்பட்ட காலம் தொடக்கம் ஆடை கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. நேரடியாக உரத்துடனான நடவடிக்கை மேற்கொள்கின்ற ஊழியர்களுக்காக அதிக பணத்தொகையும் அலுவலக ஊழியர்களுக்காக ஒப்பிட்டளவில் குறைந்த பணத்தொகையொன்று வருடாந்தம் கொடுப்பனவு செய்யப்படும். அங்கு இந்த கொடுப்பனவு செலுத்தல் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியில் தொடக்கம் இரு ஆண்டிற்கு ஒரு தடவை நடத்தப்பட்ட மதிப்பு சந்தையில் காணப்பட்ட துணி விலை உயர்ந்தமை ஒப்பீட்டளவில் குறிப்பிட்ட சதவீதத்தில் அதிகரித்து பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரமானது சட்டத்தின் அடிப்படையாக காண்பிக்கப்பட முடியும். மீளாய்வு ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட அளவு அதன் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | காணப்பட்ட சட்டத்திட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு வெளியே கொடுப்பனவுகள் செலுத்தப்படக் கூடாது. |

## 3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி கிரயம் குறைந்த விநியோக முறையொன்றினை ஸ்தாபிக்கப்படாது மற்றும் களஞ்சிய தேவை அடையாளப்படுத்தப்படாது நாட்டில் வெவ்வேறு பிரதேசங்களில் 46 களஞ்சியசாலைகள் நடாத்திச் செல்லப்படுவதற்காக மற்றும் அதன் ஊடாக சம்பளம், நிர்வாகம், செயற்பாடு மற்றும் போக்குவரத்து செலவினம் தேவையற்றதாக உயர்த்தல் காரணத்தினால் பிரதான செயற்பாட்டு நடவடிக்கையான உர விநியோகத்தின் ஊடாக தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டத்தினை பெற்றிருந்தது. | அரச மானிய உரமானது சிறு மற்றும் பெரும் போகத்திற்காக தேவையின் 60 % ஆன அளவு அண்ணளவாக 220,000 மெட்ரிக் டொன் ஆகும். அதற்கு மேலதிகமாக ஏனைய பயிர்செய்கை மானிய உரத்திற்காக 50,000 மெட்ரிக் டொன் அளவிலான இருப்பு ஆண்டு முழுவதும் விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் ஹுனுபிடிய பிரதான களஞ்சியசாவை வளாகத்தில் களஞ்சியசாலை கொள்ளளவு 67,000 மெட்ரிக் டொன் ஆவதுடன் 45 பிரதேச உர களஞ்சியசாலைகளின் கொள்ளளவு 58,000 மெட்ரிக் டொன் ஆகும். அதன் பிரகாரம் மொத்த களஞ்சியசாலை கொள்ளளவு 125,000 மெட்ரிக் டொன் இற்கு அண்ணளவாக காணப்படுகின்றது. நாட்டிற்கு பெறப்படுகின்ற மழையின் தன்மையின் அடிப்படையில் பெரும் மற்றும் சிறுபோகங்களின் ஆரம்பத்தில் சில சந்தர்ப்பங்களில் திகதிகள் | கம்பனி கிரயம் குறைந்த விநியோக முறையொன்று ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

கணிக்கப்பட முடியாது. அதன் அடிப்படையில் மானிய உர கோரிக்கை தீர்மானிக்கப்படும். எனினும் அரச கம்பனியாக இந்த உர இருப்பு தொகை தொடர்புடைய பெறுகை திட்டத்திற்கு அமைவாக இறக்குமதி செய்யப்படும். சில போகங்களின் போது மழை பெறல் தாமதமாகும் போது உரம் வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் இறக்குமதி திட்டத்திற்கு அமைவாக பெறப்படுகின்ற உர இருப்பு நாட்டிற்கு பெறப்பட்ட பின்னர் அவ் இருப்பு களஞ்சியப்படுத்துவதற்கு போதுமான இடவசதி அற்ற சந்தர்ப்பத்தில் வாடகை அடிப்படையில் வெளி களஞ்சியசாலைகள் பெற்றுக் கொள்வதற்கு நேரிட்டுள்ளது. கடந்த ஆண்டொன்றில் இதற்காக 1.6 மில்லியன் ஆன மாதாந்த வாடகையின் அடிப்படையில் 03 மாத காலத்திற்காக ரூபா 4.8 மில்லியன் ஆன பணம் செலவிடப்பட்ட சந்தர்ப்பத்தில் கணக்காய்வில் அது தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பிரதேச கமநல குழு கூட்டங்களின் போது, பருவ கூட்டங்களின் போது பிரதேச செயலாளர்கள், அரச முகவர்கள், கமநல உத்தியோகத்தர்கள் விவசாய அமைப்பு பற்றாக்குறை இன்றி உரம் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை கருத்திற் கொள்ளப்பட்டு அரச பொறுப்பினை நிறைவேற்றும் நோக்கில் அதை அடிப்படையாகக் கொண்டு களஞ்சியசாலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முழு நாட்டிலும் 30 சதுர கிலோ மீட்டரினுள் அனைத்து கமநல சேவைகளும் (375 கமநல சேவை) உள்ளடங்கும் வகையில் விஞ்ஞான ரீதியான முறையில் களஞ்சியசாலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு தனியார் மற்றும் அரச நிறுவனத்திற்குரியதற்ற இந்த உர விநியோக களஞ்சிய வலையமைப்பு அரச கொள்கை ரீதியான தீர்மானங்களின் போது **STREGIC PLAN** ஆகவும் (அரசிற்குரிய மூலோபாய வளமொன்று) பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த பிரதேச களஞ்சியசாலை நடத்திச்செல்லல் அத்தியாவசியமான விடயமாக குறிப்பிடக்கூடும்.

## 3.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்பு தொடர்பாக பெறப்பட்ட ஆய்வுக்கூட பரிசோதனை அறிக்கை தோல்வி கண்டமை காரணத்தினால் உரமானது, 02 உர இறக்குமதி கம்பனிகளுக்கு தொடர்புடைய மொத்த பெறுமதி 589,587.5 ஐ.அ.டொலர்களான 03 செயலாற்றல் பிணைகள் அறவிடப்படுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இதற்கு எதிராக வழங்குனர்கள் நடுவரை நாடியிருந்ததுடன் நடுவர் மன்றத்தில் குறித்த கம்பனி ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராதமை உறுதி செய்யப்பட்டு தரத்திற்கு அமைவாக உர வழங்கல் ஊடாக ஏற்பட்ட நட்டம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறு செயற்படாது கம்பனியினால் தீர்வு கண்டு அறவிடப்பட்ட செயலாற்றல் பிணை மீள செலுத்தப்பட்டிருந்தது. இது சர்ச்சை தன்மையிலான விடயமாக அவதானிக்கப்படுகின்றது | 2019 ஆம் ஆண்டில் நெல் மானிய உரத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட டீஎஸ்பீ இருப்பின் ஆய்வுக்கூட அறிக்கையின் அடிப்படையில் விநியோகத்திற்காக பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய விற்பனை அற்கீகாரம் தேசிய உர செயலாளர் அலுவலகத்தினால் 06 மாதங்கள் தாமதமாக்கப்பட்டது. அக் காலத்தினுள் மேற்படி தாமதத்தினால் நாடு முழுவதுமான விவசாயிகளுக்கு அடிப்படை உரம் (மண் உரம்) பற்றாக்குறைக்கு முகங்கொடுப்பதற்கு நேர்ந்தது. மேலும் ஊடகத்தின் ஊடாக அடிப்படை உரம் விவசாயிகளுக்கு பெறப்பாடை தொடர்பில் பாரிய பிரச்சாரமொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அப்போதிருந்த கமநல அமைச்சர் விவசாயிகளின் பிரச்சனைகள் தீர்த்தல் தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டத்தின் போது எதிர்காலத்தில் அங்கீகாரம் பெறப்படும் வரையில் குறித்த டீஎஸ்பீ உரம் வழங்குமாறு வாய் மூலமாக ஆலோசனை பெற்றுக் கொடுத்தார். அதன் பிரகாரம் உர இருப்பு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் 06 மாதங்களின் பின்னர் குறித்த ஆய்வு அறிக்கையில் ஒரு கலவைகூறிற்கு **(Lead)** காணப்பட வேண்டிய அளவினை பார்க்கிலும் அதிகமாக காணப்படுகின்றமை குறிப்பிட்டு தேசிய உர செயலாளர் அலுவலகம் குறித்த விற்பனை அங்கீகாரத்தினை பெற்றுக்கொடுக்காமலிருப்பதற்கு தீர்மானித்திருந்தது. ஒரே கப்பலில் சில கம்பனிகளினால் இறக்குமதி செய்யப்பட்ட ஒரே வழங்குனரின் டீஎஸ்பீ இருப்பில் எங்கள் கம்பனிக்கு பெறப்பட்ட உர இருப்பின் ஆய்வுக்கூட அறிக்கை தோல்விக் கண்டமைக்கும் ஏனைய கம்பனிகளின் ஆய்வுக் கூட அறிக்கை வெற்றி பெறல் தொடர்பாக எழுந்த பிரச்சனையின் போது மேற்கொள்ளப்பட்ட விசாரனையின் பிரகாரம் ஆய்வுக்கூட அறிக்கை தொடர்பாக தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் 03 பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களின் வேலை இடைநிறுத்தப்பட்டதுடன் விசாரனை நிறைவடையும் வரையில் ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்குனர் தொடர்பாக எடுப்பதற்கிருந்த ஒரே மாற்று சந்தர்ப்பம் அவரின் | தீர்விற்கு வருவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக பரிசோதனையொன்று நடத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயலாற்றல் நடுநிலை தீர்ப்பின் ஊடாக பணம் அறவிடல் மட்டுமாகும். அதன் பிரகாரம் வழங்குனரினால் நடுநிலை தீர்ப்பு செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டதுடன் ஆய்வுக்கூட அறிக்கை தாமதமாகல் மற்றும் குறித்த உர இருப்பு விநியோகித்து நிறைவு செய்தல் போன்ற விடயங்களின் அடிப்படையில் கம்பனிக்கு சட்ட ரீதியாக தீமையான நிலையொன்று காணப்படுகின்றமை தொடர்பிலான சட்ட ரீதியான ஆலோசனையின் அடிப்படையில் அறவிடப்பட்ட செயலாற்றல் பிணை கம்பனிக்கு விடுவிக்கப்பட்டது. மேலும், நடுநிலைத் தீர்ப்பு எங்கள் கம்பனிக்கு தீமையானதென தொடர்பிலான சட்ட ரீதியான ஆலோசனையின் அடிப்படையில் மற்றும் இந்த நடுநிலை தீர்ப்பிற்காக ஏற்பதற்கு நேரிடுகின்ற உயர்ந்த நடுவர்களின் கட்டணமும் இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் இந்த நடுநிலை தீர்ப்பின் காரணத்தினால் அரசிற்கு நட்டமொன்று ஏற்படாதிருக்க பொருத்தமான நிர்வாக தீர்மானமொன்று எடுப்பதற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நடவடிக்கை எடுக்குமாறு எழுத்து மூலமாக பெற்றுக் கொடுக்கப்பட்ட ஆலோசனை பிரகாரமும் மேற்படி தீர்மானத்திற்கு எழுந்தது. இது தொடர்பாக மேல் விசாரனை விளைவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கம்பனி எதிர்பார்க்கின்றது. | |

## 3.6 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்கு சொந்தமாக இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையில் **(Sri Lanka Accreditation Board)** பதிவு செய்யப்பட்ட ரூபா 19,130,944 பெறுமதியான ஆய்வுக்கூட உபகரணங்களை கொண்ட ஆய்வுக் கூடமொன்று காணப்படினும், மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த தெரிவு பரிசோதனைகள் 69 ஆக காணப்பட்டதுடன் ஆண்டினுள் ஈட்டப்பட்டிருந்த வருமானம் ரூபா 278,730 ஆகும். இந்த ஆய்வுக் கூடத்தில் வருமானமொன்று | எங்கள் கம்னிக்கு சொந்தமான ஆய்வுக்கூடம் அமைச்சிற்கு கையகப்படுத்திக் கொண்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து உரங்களின் தரமும் பரிசோதனை செய்வதற்காக தனிச்சையான நிறுவனமாக ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டிருப்பதுடன் அவ் செயன்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | ஆய்வுக் கூடத்திற்கு சொந்தமான உபகரணங்களில் உயர்ந்தபட்ட பயனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

ஈட்டுவதற்கு முடிந்த வகையில் மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதனால் ஆய்வுக் கூடத்திற்கு சொந்தமான வளங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3.7 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | உர வழங்குனர்களுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற ஒப்பந்தம் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட உர இருப்பிற்காக கொள்களன் பிரிவு வரை தொடர்புபடுகின்ற அனைத்து கிரயமும் வழங்குனர் முன்வைக்கப்பட்ட விலையில் உள்ளடங்கியமையின் காரணத்தினால் கோவைக் கட்டணம், கொள்களன் கழுவல் கட்டணம், வட்வரி மற்றும் முத்திரைக் கட்டணம் வழங்குனரின் தேசிய பிரதிநிதியினால் ஏற்கப்படல் வேண்டும். எனினும் வழங்குனரின் பொறுப்பொன்றாகிய மேற்படி பணிகள் கடற்படை முகவர் நிறுவனமொன்றிற்கு கையளித்தல் காரணத்தினால் கடந்த 2 ஆண்டுகளினுள் மொத்த பெறுமதி ரூபா 4,222,578 ஆன தொடர்புபடாத செலவிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கன்டெனர் கொள்களன்களினால் உர இறக்குமதி மேற்கொள்வது, **CFRCY (inco terms)** கீழாகும். அதன் பிரகாரம் உரத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் துறைமுகம் வரையில் கொண்டு வரும் வரை கொள்களன் பிரிவினுள் நிறுத்தி வைத்தல் மற்றும் மீண்டும் குறித்த முகவருக்கு கையளிக்கும் வரையில் செலவிடப்படுகின்ற செலவினம் தொடர்புடைய வழங்குனரினால் ஏற்கப்படல் வேண்டும். உரம் கொண்டு வரப்படும் போது தடைநீக்கத்திற்காக ஏற்படுகின்ற செலவினம் மற்றும் கொள்களன்கள் நல் நிலைக்கு கொண்டு வருவதற்கு ஏற்படுகின்ற கிரயம் வாங்கும் நிறுவனத்தினால் **(Consignee)** ஏற்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் பொருட்கள் கொண்டு வரும் கென்டெனர் நல் நிலைக்கு வரவைத்து கையளித்தல், எங்கள் கம்பனியினால் ஏற்கப்பட வேண்டியமையினால் இந்த செலவினம் எங்கள் கம்பனியினால் ஏற்கப்பட்டது. | வழங்குனர்களுடன் ஏற்படுத்திக் கொள்கின்ற ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ)** | **2020/2021** பெரிய பருவத்தினுள் நெல்லுக்காக பகிர்விற்காக மானிய உரம் போதுமானதாக காணப்படாமை காரணத்தினால் அக் குறைப்பாட்டினை தவிர்த்துக் கொள்வதற்கு வேறு பயிர்செய்கைக்காக உரம் வழங்கும் வழங்குனர்களிடமிருந்து கடன் அடிப்படையில் 3,500 | நெல் விவசாயிகளுக்காக அரச மானிய முறையின் கீழ் விநியோகிக்கப்படுகின்ற இராசாயண உரம் சில சந்தர்ப்பங்களில் கப்பல் தாமதமாகல், சில டென்டர் இரத்து செய்யப்படல் போன்ற காரணங்களினால் திட்டமிட்ட பிரகாரம் கம்பனிக்கு பெறப்படாதிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் நெல் விவசாயிகளுக்காக இரசாயண உரம் பற்றாக்குறையொன்று | அரச மானிய உரம் தவறாக பயன்படுத்துவதற்கு காணப்படுகின்ற சந்தர்ப்பத்தினை தவிர்த்து செயற்படல் வேண்டும். |

மெட்ரிக் டொன் யூரியா பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி உர இருப்பு இலங்கை உரக் கம்பனி பெயரில் மற்றும் அரசிடமிருந்து இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மானிய உரமாக பெயரிடப்படாது கம்பனியின் பொதியியலுடன் கமநல சேவை நிலையங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அரசின் மானிய உரத்தினை தவறுதலாக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

விநியோகிப்பதற்கு பணிப்பாளர், தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் மற்றும் கமநல அமைச்சின் செயலாளரின் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கைமாற்றல் அடிப்படையில் தனியார் கம்பனிகளிலுள்ள ஏனைய பயிர்செய்கைகளுக்காக மானிய உர இருப்புகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு (நெல் விவசாயிகளுக்காக) வழங்கப்படும். இங்கு இலங்கை உர இலச்சினை அச்சிடப்பட்டுள்ள பொதிகளுக்கு மீள பொதி செய்து வழங்கப்படும் போது 01 மெட்ரிக் டொன் இற்கு ரூபா 2125/- ஆன பணத்தொகை கம்பனிக்கு மேலதிகமாக செலவிடுவதற்கு ஏற்படுகின்றது. அதன் பிரகாரம் 3500 மெட்ரிக் டொன் இற்கு ரூபா 7.4 மில்லியன் செலவிடப்படுகின்றமையினால் இந்த நிகழ்வு தொடர்பாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டு கமநல சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்ட விநியோக திட்டத்திற்கு அமைவாக விவசாயிகளின் பெயர் பட்டியலில் பெயர் காணப்படுகின்ற விவாசாயிகளுக்கு மட்டும் இந்த உர இருப்பு விநியோகத்தினை முறையான மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றமையினால் மானிய உரம் தவறாக பயன்படுத்துவதற்கு காணப்படுகின்ற சந்தர்ப்பம் தடுக்கப்படுகின்றதென தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(இ)** பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கமைய மற்றும் சர்வதேச வழங்குனர் நிறுவனமொன்று மற்றும் இலங்கை உரக் கம்பனி இடையில் திரவ உரம் வழங்கலுக்கு பதிலாக ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக அன்றி சர்வதேச வழங்குனர் கம்பனிக்கு வங்கி பற்று பெறுவதற்காக 2018 ஆம் ஆண்டில் இலங்கை உரக் கம்பனிக்குரிய ரூபா 94,438,766 பெறுமதியான 02 நிலையான வைப்புக்கள் வங்கி பிணையாக பயன்படுத்தப்படுவதற்கு இடமளித்திருந்தது. இந்த பிணை பயன்பாட்டில் வெளிநாட்டு வழங்குனர் கம்பனி 2019 பெப்ரவரி 12 ஆம் திகதியளவில் ரூபா

இதனூடாக அறிக்கையிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும். 2018 ஆம் ஆண்டில் கம்பனிக்கு சொந்தமாக ரூபா 94,438,766 பெறுமதியான நிலையான வைப்புக்கள் இரண்டு பிணையாக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு ஏற்பட்டமையானது, இதற்கு முன்னர் 2017.04.28 ஆம் திகதி ரூபா 240 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்புக்கள் பிணையாக பயன்படுத்தப்பட்டு ரூபா 112.5 மில்லியன் வங்கி பற்று வசதியளித்துள்ளமை காரணத்தினால் 240 மில்லியனான நிலையான வைப்பினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக ஆகும். பின்னர் அப்போது நிலுவை மீதியான ரூபா 75,980,000 இற்கு ஏற்ற பிரகாரம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 94 மில்லியன்

மேற்கொண்டு வருகின்ற பரிசோதனைகள் வெற்றி பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இவ்வாறான மோசடி மீண்டும் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | 75,980,000 ஆன வங்கி பற்று வசதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அத் திகதிக்கு சேர்ந்த வட்டியுடன் செலுத்தப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 80,502,290 ஆக காணப்பட்டது. வெளிநாட்டு வழங்குனர் கம்பனி மேற்படி வங்கி பற்றினை தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணத்தினால் கம்பனி பிணையாக வைக்கப்பட்டிருந்த இரு நிலையான வைப்புக்களிலிருந்து நிலுவைக் கடன் மீதி தீர்ப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த முறையற்ற சட்ட ரீதியற்ற கொடுக்கல்வாங்கலின் காரணத்தினால் ரூபா 17 மில்லியனான இழக்கப்பட்ட வட்டி வருமானத்துடன் இலங்கை உரக் கம்பனிக்கு உருவாகியுள்ள நட்டம் ரூபா 97.5 மில்லியன் ஆக காணப்பட்டது. | பெறுமதியான வைப்பு அதற்காக பிணையாக வைப்பதற்கு 2018 யூன் மாதம் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும் இந்த மோசடிக்கு எதிராக குற்ற விசாரனை திணைக்களத்திற்கு, சனாதிபதி விசேட குற்றவியல் ஆணைக்குழு மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆனைக்குழுவினால் தனித்தனியாக பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குற்றவியல் பரிசோதனை திணைக்களத்தின் ஊடாக 2017 ஆம் ஆண்டில் தலைவராக செயற்பட்டவர்கள் நீதிமன்றத்திற்கு அஜர்படுத்தப்பட்டு தற்போது ஜாமினில் விடுவிக்கப்பட்டுள்ளனர். | |
| **(ஈ)** | இலங்கை உரக் கம்பனி மற்றும் வெளிநாட்டு வழங்குனர் கம்பனி இடையில் 2017 ஏப்ரல் 17 ஆம் திகதி ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தம் பிரகாரம் வழங்கப்பட்ட திரவ உரங்களில் 2021 மார்ச் அளவில் ரூபா 79,716,652 பெறுமதியான காலாவதியான உரம் 109,408 லீட்டர் அளவு ஹுனுபிடிய களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | தற்போது ஹுனுபிடிய பிரதான களஞ்சியசாலையில் எஞ்சி காணப்படுகின்ற 109,408 லீட்டர் திரவ உர தொடர்பான மேல் தீர்மானம் எடுப்பதற்காக அவற்றின் மாதிரி பெறப்பட்டு அத் திரவ உரங்களின் இரசாயண கலவை தொடர்பாக ஆய்வுக்கூட பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இருப்பு காலாவதியாகி இருப்பினும் ஆய்வுக்கூட அறிக்கைகளின் பிரகாரம் தரத்தின் அடிப்படையில் பாரிய விதத்தில் குறைந்திருக்கவில்லை. அதனால் இவற்றினை நல்நிலைக்கு கொண்டு வரப்பட்டு அல்லது விற்று நட்டத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இவ்வாறான நட்டங்கள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இந்த நட்டம் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு தீர்மானமொன்று எடுக்கப்படல் வேண்டும். |
| **(உ)** | லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடாக கம்பனியின் பொது அறிவித்தல் பிரசுரிக்கும் முறை மாற்றப்பட்டு தலைவரின் கோரிக்கைக்கமைய பெறுகை செயன்முறையன்று தனியார் விளம்பர நிறுவனமொன்றின் ஊடாக பத்திரிக்கை அறிவித்தல் பிரசுரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை காரணத்தினால் கடந்த காலத்தில் லேக்ஹவுஸ் | நிறுவனத்தின் கொள்கையாக பல ஆண்டுகள் தொடக்கம் கம்பனியின் அனைத்து விளம்பரங்களும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடாக பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. திரு ரோஷன வடுகே தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர் அவரின் ஆலோசனையின் பிரகாரம் முகவர் நிறுவனமொன்றின் ஊடாக விளம்பரங்கள் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் தற்போது 2020 ஆம் | பெறுகை முறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுவனமிடமிருந்து அறிவித்தல் பிரசுரிப்பதற்கு ஏற்கப்பட்ட செலவினத்தினை பார்க்கிலும் இரு மடங்கினை விட அதிக செலவொன்று ஏற்பதற்கு கம்பனிக்கு நேர்ந்தது. கணக்காண்டினுள் பொது அறிவித்தல்களுக்காக மேற்படி தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ள தொகை ரூபா 2,243,376 ஆக காணப்பட்டது. | ஆண்டின் ஆரம்பத்திலிருந்து முகவர் நிறுவனத்தின் ஊடாக விளம்பரம் பிரசுரிப்பதற்கு நிறுத்தப்பட்டதுடன் அனைத்து விளம்பரங்களும் வரையறுக்கப்பட்ட அசோசியேட்ட் பத்திரிக்கை கம்பனிக்கு (லேக்ஹவுஸ்) சொந்தமான பத்திரிகையில் மட்டும் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |

**3.8 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையினுள் உள்ளடக்கப்பட்டுள்ள புள்ளி வழங்கும் முறைமை மாற்றப்பட்டு நேர்முகப் பரீட்சையொன்றின் போது காண்பிக்கப்படுகின்ற திறமைக்காக அங்கீகரிக்கப்பட்ட புள்ளி அளவு 25 புள்ளி தொடக்கம் 60 புள்ளி வரை அதிகரித்து பதவிகளுக்காக மிக முக்கியமான கள அனுபவத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த 30 புள்ளியானது, 05 புள்ளி வரையில் குறைத்து நேர்முகப் பரீட்சைக்காக தகுதி பெற்றிருந்த திறமை மற்றும் அனுபவமுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மிக நியாயமற்றவாறு குறைந்த திறன் மற்றும் அனுபவமுள்ள விண்ணபதாரிகளுக்கு தனிப்பட்டவாறு 2019 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக 28 நபர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு கம்பனியின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப்போதிருந்த முகாமைத்துவத்தினால் நேர்முகப் பரீட்சை சபையொன்று ஊடாக குறித்த புள்ளிகள் பெற்றுக் கொடுக்கும் முறைமை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இணைத்தல் நடைமுறைளினுள் உள்ளடக்கப்பட்டுள்ள புள்ளிகள் பெற்றுக் கொடுக்கும் முறைமை கருத்திற் கொள்ளப்படாது நடவடிக்கை எடுத்திருந்தது. | பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு ஏற்பட்டுள்ள அசாதாரணத்தினை திருத்தல் வேண்டும். |

(ஆ) மானிய உரம் பெற்றுக் கொடுக்கும் முறைமை செயற்படும் திகதியிலிருந்து நெற் பயிர்செய்கைக்காக உரம் வழங்கும் அரசின் பிரதிநிதியாக இலங்கை உரக் கம்பனி செயற்படுகின்றதுடன் அத் திகதியிலிருந்து விற்பனை மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான ஏனைய விடயங்கள் பாரியளவில் குறைந்துள்ளது. தேசிய உர செயலாளர் அலுவலகத்தின் அலோசனையின் அடிப்படையில் பிரதேச உர களஞ்சியசாலை ஊடாக உரம் வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றதுடன் துறையினுள் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் புதிய சந்தைப்படுத்தல் மேம்பாட்டு உபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தல் அல்லது சந்தைப்படுத்தல் மேற்பார்வை போன்ற நடவடிக்கைகளினுள் உள்ளடக்கப்படாது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கை திருத்துவதற்கு பதிலாக கம்பனி அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பதவியணிக்குரிய மாவட்ட சந்தைப்படுத்தல் மேம்பாடுகள், பிரதேச சந்தைப்படுத்தல் மேம்பாடுகள், சந்தைப்படுத்தல் மேம்பாடு உத்தியோகத்தர்கள் ஆகிய பதவிகளுக்கு தொடர்ச்சியாக வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டிலும் 3 பிரதேச சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பதவிகளுக்காக கடமை நிறைவேற்றல் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் கம்பனிக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவிற்காக விளைவற்ற கிரயமொன்றினை ஏற்பதற்கு நேர்ந்திருந்தது.

எங்கள் கம்பனியின் ஊழிய கலவையின் பிரகாரம் பிரதேச முகாமையாளர்கள் 09 நபர்களினை இணைத்துக்கொள்வதற்கு முடிகின்றது. போட்டி சந்தையின் கீழ் உர விற்பனை செய்தல் அடிப்படையாகக் கொண்டு இந்த பதவிக்காக தேவையான உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்னர். அவ் உத்தியோகத்தர்களில் மூன்று நபர்கள் ஓய்வு பெற்றமையினால் 03 வெற்றிடங்கள் உருவாகின. அவ் வெற்றிடங்கள் நிரப்பல் தொடர்பாக முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் தேவையில்லை எனவும் எதிர்காலத்தில் போட்டிச் சந்தை நிலையொன்று காணப்படின் அப்பதவி நிரப்பல் பொருத்தமற்றதெனவும் பரிந்துரைக்கப்பட்டது. எனினும் இது தொடர்பாக தொழிற்சங்கங்களின் பிரநிதிகள் தற்போது மாவட்ட விற்பனை முகவர் பதவிகளில் காணப்படுகின்ற சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் பதிற்கடமைக்காக நியமிக்குமாறு தொடர்ச்சியாக செல்வாக்கு செலுத்துகின்றனர். இறுதியில் இது தொடர்பாக தலைவர், இராஜாங்க அமைச்சர், செயலாளர், தொழிற்சங்க பிரதிநிதிகள், எங்கள் கம்பனியின் மனிதவள முகாமையாளர், மேல் பொது முகாமையாளர் போன்ற பிரதிநிதிகளினாலான குழுவொன்றின் ஊடாக நீண்ட கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு மேலதிகமாக கமநல அமைச்சர் எழுத்து மூலமாக மாவட்ட விற்பனை முகவர் பதவியில் உத்தியோகத்தர்கள் பதிற்கடமை பதவிக்கு நியமிக்குமாறு தெரிவித்ததுடன் எதிர்காலத்தில் கரிம உரம் விவசாயிகளுக்கிடையில் பிரசித்திபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் வெளிகள உத்தியோகத்தர்களுக்கு பாரிய கடமை பணிக்கடுவதனால் அதன் பிரகாரம் நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும் வரையில் சிரேஸ்ட் மாவட்ட விற்பனை முகவர்கள் மூவர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் குறித்த பதிற்கடமை பதவிகளில் செயற்பட்டனர்.

அங்கீகரிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கை தேவையின் பிரகாரம் திருத்தப்பட்டு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்கு தொடர்புடையதாக அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவிகளுக்காக ஊழிய ஆட்சேர்ப்பின்றி 06 மாதங்களுக்கு ஒரு தடவை கடமையில் மீள அமர்த்தல் அடிப்படையில் 12 நாட் பணிளாளர்களின் சேவை பெறப்பட்டு அதற்காக ரூபா 1,362,691 செலுத்தப்பட்டிருந்ததுடன் கம்பனியின் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 4 உள்ளிருப்பு பயிற்சியாளர்கள் ஆட் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 2,74,850 ஆன சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | அரசினால் செயற்படுத்தப்பட்டுள்ள மானிய உர விநியோக வேலைத்திட்டம் முறையாக மற்றும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக வெற்றிடம் காணப்படுகின்ற முதன்மை தொழிநுட்பமல்லாத சேவை பிரிவில் களஞ்சியசாலை உதவியாளர் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இணைத்துக் கொள்ளப்பட்ட 09 ஊழியர்கள் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டிருந்தனர். இணைத்தல் நடைமுறையின் பிரகாரம் குறித்த தகைமைகளை பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட களஞ்சியசாலை நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நிரந்தர கடமைக்கு இணைக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே அப்போதிருந்த கம்பனியின் தலைவர் மற்றும் தொழிற்பாட்டு பணிப்பாளருக்காக இரு ஓட்டுநர்கள் மற்றும் கமநல இராஜாங்க அமைச்சருக்கு ஒரு ஓட்டுநரும் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறே பல்கலைக்கழக பட்ட கற்கைநெறி தொடரும் மாணவ/ மாணவிகளுக்காக மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைதொழிற்பயிற்சி அதிகார சபை/ கமத்தொழில் பாடசாலை போன்ற நிறுவனங்களில் கற்கைநெறிகள் பின்பற்றும் மாணவ மாணவிகளுக்காக பயிற்சி சந்தர்ப்பங்கள் பெற்றுக் கொடுக்குமாறும் பல்கலைக்கழக டீன் மற்றும் குறித்த நிறுவன தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்பட்டு, அவர்களின் கல்வி தேவைகளும் கருத்திற் கொள்ளப்பட்டு, எங்கள் கம்பனிக்கு பணிக்கப்பட்டுள்ள சமூக பொறுப்பாக கருதப்பட்டு 06 மாத காலப்பகுதிக்காக அவர்களுக்கு எங்கள் நிறுவனத்தினுள் பிரயோக பயிற்சியொன்று பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>அப் பயிற்சியாளர்களினால் அறிவு மற்றும் திறன்கள் நிறுவனத்தின் உற்பத்தி திறனை உயர்த்துவதற்காக நல்ல தீர்வென்பதனால், அப் பயிற்சியாளர்களுக்காக பயிற்சிக்கு அறிக்கையிடும் திகதிக்கு ரூபா 500/- ஆன கொடுப்பனவொன்று எங்களினால் செலுத்தப்படும். | அங்கீகரிக்கப்பட்ட நிலையான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக தேவைப்படுகின்ற பயிற்சி தேவைகள் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவு தொடர்பில் மதிப்பொன்றின் ஊடாக தயாரிக்கப்பட்ட வருடாந்த பயிற்சி திட்டமின்றி மீளாய்வாண்டினுள் வேலைத்திட்டங்கள் மற்றும் பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்கள் பங்கு பெற வைப்பதற்காக ரூபா 1,671,730 ஆன கிரயமொன்று ஏற்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயலாற்றல் மீளாய்வின் ஊடாக பயிற்சி தேவைகள் கருத்திற் கொள்ளப்படுவதுடன் குறித்த பிரிவிற்கு பொறுப்பான முகாமையாளர்களின் பரிந்துரையின் அடிப்படையில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டு ஊழியர்கள் ஈடுப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறே ஊழியர்கள் நீண்ட கால தொழில் அபிவிருத்திக்காக நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு பட்டப்பின் படிப்பு பட்டம் கற்பதற்காக ஒப்பந்தத்தின் நிதி உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. | வருடாந்த பயிற்சி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பயிற்றிக்காக உத்தியோகத்தர்களை பங்கேற்க வைத்தல் வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 முகாமைத்துவ தகவல் முறைமையின் செயற்திறன்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவன வள திட்டமிடல் முறைமையொன்று **(ERP System)** ஸ்தாபிப்பதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து கணக்கு ஆண்டு வரை மொத்த பெறுமதி ரூபா 38,176,014 ஆன கிரயமொன்று ஏற்றிருப்பினும் மேற்படி முறைமை ஒட்டுமொத்த இறக்குமதியையும் மற்றும் நிறுவப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற முறைமைகளும் வலுவான கட்டுப்பாடுகள் அன்றி செயற்படுத்தப்படல் காரணத்தினால் ஏற்கப்பட்ட நிறுவல் கிரயம் அண்ணளவாக ரூபா 1,580,000 ஆன ஸ்தாபிக்கப்பட்ட நிறுவகத்திற்கு செலுத்தப்படுகின்ற வருடாந்த பராமரிப்பு செலவில் எதிர்பார்க்கப்பட்ட விளைவு பெற்றுக் கொள்வதில் கம்பனி தோல்வி கண்டிருந்தது. | அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தரவுகள் இந்த வள திட்டமிடல் மென்பொருள் அமைப்பின் **(ERP)** ஊடாக குறித்த பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஒட்டுமொத்த அமைப்பினதும் 85 % ஆன வெற்றி அடையாளப்படுத்திக் கொள்ள முடியும். எஞ்சிய 15 % இற்கு தொடர்பாக இந்த அமைப்பின் செய்றபாடு தொடர்பாக பிரதான பிரச்சனையாகக் காணப்படுவது, எங்கள் கம்பனிக்கு சொந்தமான பிரதேச களஞ்சியாலைகள் 24 இற்கு தேவையான கணினி வண்பொருள் வசதி பெற்றுக் கொடாமை காரணத்தினால் அக் களஞ்சியம் தொடர்புடைய அமைப்புடன் தொடர்புப்படுத்தப்பட்டில்லை. அக் களஞ்சியசாலை ஊடாக பெறப்படுகின்ற தகவல்கள் பிரதான அலுவலகத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டு தகவல்கள் நாளதுவரையாக்கப்படடுவதற்குள்ள தாமதம் இந்த குறை உருவாகுவதற்கு காரணமாகியுள்ளது. எஞ்சிய 24 களஞ்சியசாலைகள் வலையமைப்பில் பிணையப்படுத்தப்பட்ட பின்னர் இந்த பிரச்சனை தீர்க்கப்படும். தற்போது இந்த நிறுவன வள திட்டமிடல் முகாமைத்துவ மென்பொருள் அமைப்பின் ஊடாக பின்னரும் பணிகள் நிறைவு | ஒட்டுமொத்த நிறுவனமும் ஒட்டுமொத்த செயற்பாடும் உள்ளடங்கும் வகையில் அமைப்பொன்று ஸ்தாபிக்க்ப்படல் வேண்டும். |

செய்யப்பட்டுள்ளது.

1. **Pay Roll system**
2. **Inventory Control**
3. **Attendance**
4. **Debtors**
5. **Creditors System**

இன்னுமாக நிறைவு செய்யப்படாத பணிகளாவது,

1. **Accounting**
2. **Fixed Assets Control**

இந்த செயற்பாடுகள் அடுத்த ஆண்டு தொடக்கம் நிறைவு செய்து முழு அமைப்பும் செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | உரம் பெறல், வழங்குதல், மாற்றல் உள்ளடங்கலாக உரம் தொடர்பான முழுமையான செயற்பாடு கணனிமயப்படுத்தப்பட்டிருப்பினும் கணினி அமைப்பிற்கு முன்னரான திகதிக்கு நாளதுவரையாக்கப்படும் விதத்தில் தரவுகள் உள்ளடக்கும் திறன் காணப்படுகின்றமை, தேவையான பொது கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்பு கட்டுப்பாடு செயற்படுத்தப்படாமை காரணத்தினால் இருப்பு கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய கணினி அமைப்பு தொடர்பாக கணக்காய்வினால் திருப்தியடைய முடியவில்லை. | ஆண்டு இறுதியில் பௌதீக பொருள் இருப்பு நடவடிக்கைக்காக அரச கணக்காய்வு பிரிவின் பங்கேற்புடன் இருப்பு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமையினால் இறுதி இருப்பின் துல்லியம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையை குறிப்பிடுகின்றேன். எனினும், நிறுவனத்தின் களஞ்சியங்கள் கணினி அமைப்பில் அன்று கைப்புத்தக முறைமையில் இருப்பு பதிவேடுகள் பேணிச் செல்லப்படுகின்றமையினால் அவ் இருப்பு நாளதுவரையாக்கப்படல் பிரதான அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு நாளதுவரையாக்கப்படல் நடவடிக்கைகளில் சிறிய தாமதங்கள் காணப்படுகின்றமையை ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன் அக் குறையும் திருத்தப்படுவதற்கு அதாவது நிறுவனத்தின் எஞ்சிய களஞ்சியங்களும் சில நாட்களினுள் கணிமயப்படுத்தப்படுவதற்கு முகாமைத்துவம் தீர்மாணித்துள்ளமையை தெரிவிக்கின்றேன். அதனூடாக கணக்காய்விற்கு தேவையான இறுதி இருப்பு அறிக்கை தகவல்கள் (மிகவும் வெளிப்படைத்தன்மையாக பெற்றுக் கொடுப்பதற்கு) பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவிக்கின்றேன். | அத்தியாவசிய பொது கட்டுபாடுகள் மற்றும் அமைப்பு கட்டுப்பாடுகள் செயற்படுத்தப்படல் வேண்டும். |